# ஆண்டின் பொதுக்காலம் 23 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(06-09-2015)*

*திருப்பலி முன்னுரை - 1*

ஆண்டவரின் அன்பு மக்களுக்கு அவரின் புனித வேளையில் என் எளிமையான வாழ்த்தைக் கூறி மகிழ்கின்றேன். இன்று பொதுக்காலம் இருபத்திமூன்றாம் ஞாயிறு.

வாழ்விழந்து, வழியிழந்து, விரக்தியோடும், அங்கலாய்ப்போடும் வாழும் மக்களுக்கு வலுவூட்டுவதாய் இன்றைய இறைவார்த்தைகள் அமைந்துள்ளன. இறைவனே மாபெரும் விடுதலைச் சக்தி. அவரிடம் வேற்றுமை எதுவும் கிடையாது. இறைவன் தம் மக்களை மீட்கவும், குணப்படுத்தவும், மகிழ்ச்சியாக வைத்திருக்கவுமே விரும்புகின்றார். காது கேளாதோரின் செவிகள் கேட்கும். அப்பொழுது, காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக்குதிப்பர்: வாய்பேசாதோர் மகிழ்ந்து பாடுவர்: பாலைநிலத்தில் நீரூற்றுகள் பீறிட்டு எழும்: வறண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். கனல் கக்கும் மணல்பரப்பு நீர்த் தடாகம் ஆகும்: தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும்: என்னும் இறைவார்த்தைகள் எல்லையில்லா இறையன்பின் வெளிப்பாடாக அமைந்தள்ளன. எனவே நாமும் இறைவார்த்தையை முழுமையாக ஏற்றுக்கொண்டு, மாட்சி மிக்க நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிடம் நம்பிக்கை கொண்டுள்ள நீங்கள் ஆள்பார்த்துச் செயல்படாதீர்கள். என்னும் இறைவார்த்தையை வாழ்வாக்கி, வேற்றுமை ஒழித்து உறவின் இறைமக்கள் கழுகமாக வாழ இத்திருப்பலியில் வரங் கேட்டுச் செபிப்போம்.

## திருப்பலி முன்னுரை ~ 2

இறைவன் அன்பு வழிநடத்தல்களில் தங்களை உட்படுத்தி ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்றுக்கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். நன்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இன்றைய திருவழிபாடு இயேசுவில் செயல்பட்ட கடவுளின் வல்லமையை உணர நமக்கு அழைப்பு விடுக்கிறது. இறைவாக்கினர்கள் முன்னறிவித்த இறைவாக்குகள் இயேசுவில் நிறைவேறியதை இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றன. அற்புதங்கள் செய்கின்றவராகிய நம் ஆண்டவரை நம்பிக்கையோடு தேடிச் சென்று நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். நமது உடல், உள்ளக் குறைகளை நீக்க அவரால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டுமே கடவுள் எதிர்பார்க்கிறார். நம் ஆண்டவரைப் போன்று பிறருக்கு நன்மை செய்பவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**வல்லமையும், திடனும் தரும் தந்தையே இறைவா!,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரையும், இன்றைய உலகில் நாளுக்கு நாள் எழும் சவால்களைக் கண்டு நிலைகுலைந்து விடாது, உறுதியான விசுவாசத்தோடு பணி ஆற்றக் கூடிய அருளை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டும் தந்தையே இறைவா!,**

வாழ்விழந்து, வழியிழந்து, விரக்தியோடும், அங்கலாய்ப்போடும் வாழும் மக்களுக்கு விடுதலையைக் கொடுத்து, அவர்கள் பாதுகாப்பும், மகிழ்ச்சியம் நிறைந்த வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கொடைகள் அனைத்திற்கும் ஊற்றான இறைவா! ,**

உமது பிள்ளைகளாகிய நாம், வெறுமனே மேலோட்டமான கொண்டாட்டங்களிலும், சடங்காசாரங்களிலும் எமது கவனத்தைச் செலுத்தாது , ஆவியிலும் , உண்மையிலும் வழிபடுகின்ற மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றவரும்: ,**

பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றவரும் சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றவரும், ஆண்டவர் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றவரும்: தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றவனுமான தந்தையே எம் இளைஞர்களை ஆன்மீகத்திலும் அருள் வாழ்விலும் உறுதிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நம்பிக்கையின் ஊற்றாம் இறைவா,**

உலகெங்கும் நீர் செய்து வரும் அற்புதங்களின் மேன்மையால் மக்கள் உமது வல்லமையை உணரவும், நீர் உண்மை கடவுள் என்பதை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளவும் துணைபுரிய வேண்டுமென்றும், எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் தன்னலத்தினைக் களைந்து, சமூக நலத்திலும், எளியவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்களாய் வாழ்ந்து, இறையாட்சிக்குரிய சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நலந்தரும் ஊற்றாம் இறைவா,**

உம்மை நம்பிக்கையோடு தேடி வரும் மக்களின் உடல் நோய்களையும், மன நோய்களையும் முழுமையாக குணப்படுத்தி, மற்றவர்களின் முன்னிலையில் உமது மாட்சிமிகு செயல்களின் சாட்சிகளாக அவர்களை மாற்ற வேண்டுமென்றும், உம் திருமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்குபவர்களாய் வாழும் அருளை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மேலும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.